மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2019 ஆம் ஆண்டு ஆவடி மாநகராட்சிச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 28/2019) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

## (உ) தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2019

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2019 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 29/2019), மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2019 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு

எண் 29/2019)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. ரங்கநாதன், சொல்லுங்கள்.

பிற்பகல் 2—55

**திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையிலே நீண்ட காலமாக, 50 ஆண்டுகளுக்கும் மேலாக சட்டமன்ற உறுப்பினராகவும், சட்ட மேலவை உறுப்பினராகவும் இருந்து, தமிழுக்காகவும், தமிழ் மக்களுக்காகவும், கடல் கடந்து வாழ்கின்ற தமிழர்களுக்காகவும், தமிழ் மொழிக்காகவும், தமிழினத்திற்காகவும், தமிழ்நாட்டின் வளர்ச்சிக்காகவும் பாடுபட்ட ஒப்பற்ற தலைவர், தமிழினத் தலைவர், கழகத்தினுடைய தலைவராக, தமிழகத்தினுடைய முதல்வராக 5 முறை இருந்து சிறப்பாக, செம்மையாக, அடித்தட்டு மக்கள், பாமர மக்கள், தாழ்த்தப்பட்ட மக்கள், பிற்படுத்தப்பட்ட மக்கள், முற்பட்ட மக்கள் என்று அனைத்துத் தரப்பினரும் ஏற்றுக்கொள்கின்ற வகையில், ஆட்சி புரிந்த தலைவர் கலைஞர் அவர்கள் இருக்கும் திசை நோக்கி வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழகம் மற்றும் பாண்டிச்சேரி உட்பட நடந்த நாடாளுமன்றத் தேர்தலில் இரண்டு தொகுதிகளில் ஒரு தொகுதியில் தேர்தல் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. ஒரு தொகுதியில் எதிரணியினர் வெற்றி பெற்றுள்ளார்கள். ஆகவே, 38 தொகுதிகளிலும் வெற்றி வாகை சூடிய கழகத்தினுடைய தலைவராகப் பொறுப்பேற்றுள்ள ஒப்பற்ற தலைவர் அண்ணன் தளபதியார் அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) தமிழக மக்களுக்கும் எனது வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

உள்ளாட்சிகள், நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகளில் தனி அலுவலர்களை நியமிக்க கொண்டு வந்திருக்கின்ற 2019 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவினை திராவிட முன்னேற்றக் கழகம் கடுமையாக. . . (குறுக்கீடு)

---

@ 19-7-2019 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. ரங்கநாதன், என்னவென்று சொல்லுங்கள்.*

**திரு. ப. ரங்கநாதன்:** *இந்தச் சட்டமுன்வடிவினை நாங்கள் எதிர்க்கிறோம். (குறுக்கீடு) ஏனென்றால். . .*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர்கள், உரையாற்றும்போது அமைதியாக இருங்கள். (குறுக்கீடு)*

**திரு. ப. ரங்கநாதன்:** *இப்போது என்ன செய்யப் போகிறீர்கள்? (குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *இல்லை, நீங்கள். . . (குறுக்கீடு) இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. ரங்கநாதன், சொல்வதைக் கேளுங்கள். நான் அவர்களை அமைதியாக இருக்கும்படி சொல்லிவிட்டேன். நீங்கள் என்னைப் பார்த்து சொல்லுங்கள். (குறுக்கீடு) இல்லை, சட்டமுன்வடிவை என்ன காரணத்திற்காக எதிர்க்கிறீர்களோ, அதைச் சொல்லுங்கள். அவ்வளவுதான்.*

**திரு. ப. ரங்கநாதன்:** *நான் எல்லாவற்றையும் சொல்வேன். இப்படியெல்லாம் பேசக் கூடாது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *திரு. ரங்கநாதன், நீங்கள் என்ன சொல்ல வருகிறீர்களோ, அதைச் சொல்லுங்கள்.*

**திரு. ப. ரங்கநாதன்:** *நீங்களெல்லாம் யார்? எனக்குத் தெரியாதா?*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *உங்களை நான் என்ன சொல்ல முடியும்?*

**திரு. ப. ரங்கநாதன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படியில்லை. நீங்கள் என்னைப் பேச அழைத்தீர்கள்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *இல்லை, நீங்கள் பேசுவதற்கு. . . (குறுக்கீடு)*

**திரு. ப. ரங்கநாதன்:** *இப்படி* chorus *பாடிக் கொண்டிருந்தால், நான் எப்படிப் பேசுவது?*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *நான் சொல்வதைக் கேளுங்கள். நீங்கள் பேசுவதற்கு வசதியாகத்தான் அனைவரையும் அமைதியாக இருக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொண்டேன். நீங்கள், உங்கள் கருத்தைச் சொல்லுங்கள்.*

**திரு. ப. ரங்கநாதன்:** *நீங்கள் அவசரப்படாதீர்கள்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *நான் அவசரப்படவில்லை, நீங்கள் சொல்லுங்கள்.*

**திரு. ப. ரங்கநாதன்:** *தனி அலுவலர் நியமனம் செய்வதிலே, தொடர்ந்து 2016—லிருந்து உள்ளாட்சித் தேர்தலை நடத்தாமல் காலம் கடத்துவதற்காக, அதை வைத்து ஆளும் கட்சித் தரப்பிலே தேர்தல் நடத்தாமல், ** (குறுக்கீடு) இன்று. . . (குறுக்கீடு) 3—வது முறையாகவும். . .*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *நீங்கள், சட்டமுன்வடிவின்மீது உங்கள் கருத்துகளைச் சொல்லுங்கள். தேவையில்லாமல் ** என்று சொன்ன வார்த்தை அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. நான் சொன்னது உட்பட அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.*

*பிற்பகல் 3—00*

**திரு. ப. ரங்கநாதன்:** *நான் பேசியதில் என்ன தப்பு என்று சொல்லுங்கள்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *நீங்கள் இந்தச் சட்டமுன்வடிவை எதிர்ப்பதற்கான காரணங்களைத் தாராளமாகக் கூறலாம். (குறுக்கீடு)*

**திரு. ப. ரங்கநாதன்:** *அது என்ன தப்பான வார்த்தைகள்?*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது தேர்தல் ஆணையம் சம்பந்தப்பட்டது, அரசு சம்பந்தப்பட்டது அல்ல. இதற்கென தனி அமைப்பு இருக்கின்றது. இந்தத் தேர்தலை உள்ளாட்சிக்கு என்று உள்ள தேர்தல் ஆணையம்தான் நடத்துகின்றது, அரசு அல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. ரங்கநாதன் அவர்கள்.*

---

*** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

**திரு. ப. ரங்கநாதன்:** தேர்தல் ஆணையத்திற்கு இந்தத் தேர்தலை நடத்துவதற்கு எல்லா உரிமைகளும் உண்டு என்பது எனக்கும் தெரியும், நீதிமன்றத்திற்கும் தெரியும். ஆனால், இதேபோன்றுதான் தேர்தலைத் தள்ளிவைத்தார்கள். உள்ளாட்சித் தேர்தலை நடத்தவிடாமல் குஜராத், அகமதாபாத் மாநகராட்சியில் ஒரு வழக்கு உச்ச நீதிமன்றத்திற்கு வந்தது. அந்த வழக்கைத் தொடுத்தவர் திரு. கிஸன்சிங் தோமர். அவருக்கு எதிர் வாதியாக இருந்தது அகமதாபாத் மாநகராட்சி. உச்ச நீதிமன்றத்தில் அந்த வழக்கில் அரசியல் அமர்வு, தலைமை நீதிபதி அவர்கள் தலைமையில் 5 நீதிபதிகள் அமர்ந்து, 'வழக்கு இருந்தாலும் உள்ளாட்சித் தேர்தலைப் பொறுத்தவரையில் தேர்தல் நடத்த வேண்டும், அரசியல் சட்ட விதிகள் Article 243(u) மற்றும் 243 (e) பிரகாரம் தேர்தல் நடத்த வேண்டும்' என்று தீர்ப்பளித்திருக்கின்றார்கள். அந்தத் தீர்ப்பின் அடிப்படையில்தான் இங்கே மாநில தேர்தல் ஆணையம், தேர்தல் அறிவித்தவுடன் அதில் இருக்கின்ற குறைபாடுகள். . . (குறுக்கீடு) மாநில தேர்தல் ஆணையம் 2016—ல் தேர்தலை அறிவித்தவுடன், பழங்குடி இனத்தவர்களுக்கு தேர்தலில் இட ஒதுக்கீடு இல்லாத சூழ்நிலையில், திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில், அவர்களுக்கும் இட ஒதுக்கீடு வேண்டும் என்ற எண்ணத்தோடு நீதிமன்றம் சென்று அங்கே வழக்கு நிலுவையில் உள்ள சூழ்நிலையில், மாநில தேர்தல் ஆணையம் தேர்தல் நடத்துவதற்கு காலதாமதம் செய்து, இதுவரையில் பல்வேறு சூழ்நிலைகளில், சென்னை உயர் நீதிமன்றத்தில் இந்த வழக்கு சம்பந்தமாக 18 முறை வாய்தா வாங்கி இருக்கின்றார்கள். அதேபோன்று உச்ச நீதிமன்றத்தில் இந்த வழக்கு. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. ரங்கநாதன், நீங்கள் சொல்கின்ற விவரம் எல்லாம் இந்த அவையில் ஏற்கெனவே பலமுறை பேசப்பட்டு பதிவு செய்யப்பட்டிருக்கின்றது. உங்களுடைய எதிர்ப்பை இந்தச் சட்டமுன்வடிவிற்குத் தெரிவிக்க வேண்டும் என்ற காரணத்தினால் நீங்கள் பேசிக்கொண்டிருக்கின்றீர்கள். நீங்கள் பேசுவதை சுருக்கமாக இந்த அவைக்குத் தெரிவித்து. . . (குறுக்கீடு) இல்லை, எனக்கு Bills எல்லாம் நிறைய இருக்கின்றன. நீங்கள் எனக்குக் கொஞ்சம் ஒத்துழைப்பு கொடுங்கள்.

**திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உச்ச நீதிமன்றத்திலும் 67 முறை வாய்தா வாங்கியிருக்கின்றார்கள்.

ஆகவே, இந்தச் சட்டமுன்வடிவைப் பொறுத்தவரையில், திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் எதிர்ப்பதோடு, நீதிமன்றத்தில் டிசம்பர் மாதம் 2017–க்குள் தேர்தலை நடத்துவோம் என்று வாக்குறுதி அளித்திருக்கின்றீர்கள். அதற்குள் அந்தத் தேர்தலை நடத்தவில்லை. இந்த 2019–ஆம் ஆண்டிலாவது தேர்தலை நடத்துவதற்கு நீங்கள் தேதியை அறிவிக்க வேண்டும் என்று தங்களைக் கேட்டுக்கொள்கிறேன். தேர்தல் நடத்த வேண்டும் என்ற எண்ணத்தோடு எனக்கு இந்த வாய்ப்பினை வழங்கிய திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும், கழகத் தலைவருக்கும் நன்றியைச் சொல்லி அமர்கின்றேன், நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர், கொஞ்சம் அமைதியாக இருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர், நீங்கள் பேசுங்கள்.

பிற்பகல் 3–05

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நீண்ட ஒரு கேள்வியை கேட்டிருக்கிறார். ஆனால், இந்தத் தேர்தலை யார் நிறுத்தினார்கள் என்று அவருக்கே நன்றாகத் தெரியும். அதற்குள் போக வேண்டாம் என்று நினைத்துக்கொண்டிருந்தேன். ஆனால், அவர் போகச் சொல்லியிருக்கிறார். முதலில், தி.மு.க. தான் நீதிமன்றத்திற்குச் சென்று இந்தத் தேர்தலை நிறுத்தியது. ஆனால், புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருக்கும்போது, தேர்தல் அறிவித்து, வாக்குகள் எல்லாம் கேட்டு, எல்லாமே முடிந்து கடைசி நேரத்தில் தேர்தல் நின்றுவிட்டது. எதற்கு நீங்கள் நீதிமன்றத்திற்குப் போனீர்கள்? உள்ளாட்சி அமைப்புகள், பழங்குடியினருக்கான இட ஒதுக்கீட்டை முறையாகச் செய்யவில்லை என ஆட்சேபணை தெரிவித்து சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது. அந்த வழக்கில் 4–10–2016 ஆம் தேதியிட்ட இடைக்காலத் தீர்ப்பில் உள்ளாட்சித் தேர்தலை இரத்துச் செய்து, இந்த இட ஒதுக்கீடு எல்லாம் சரியாக இருப்பதாக நீதிமன்றமே தெரிவித்தது. வேறு சில காரணங்களால் அதற்குப் பிறகு உயர் நீதிமன்றம் உத்தரவிட்டது; இப்படித்தான் தொடர்ந்திருந்தது. அதற்குப் பிறகு நீங்கள் உச்ச நீதிமன்றம் வரை சென்றீர்கள்.

[திரு. எஸ்.பி. வேலுமணி] [2019 ஜூலை 20

தொடர்ந்து அவர் பேசியதைப்போல நான் பேச விரும்பவில்லை. பலதடவை இதைப் பற்றி பேசியாகிவிட்டது. ஆகவே, உச்ச நீதிமன்றம் இப்போது இதையெல்லாம் ஏற்றுக்கொண்டு, தேர்தல் தேதியையும் தேர்தல் ஆணையம் கொடுத்துள்ளது. நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னதுபோல, தேர்தல் ஆணையம் ஒரு தனி body. அதுமட்டுமல்ல, அந்த நேரத்தில் தேர்தல் நடத்த வேண்டியது, நீங்கள் நிறுத்திய காரணத்தினால், பல்வேறு காரணங்களால் தேர்தல் ஆணையம் உச்ச நீதிமன்றத்தில் எடுத்துரைத்து, இன்றைக்கு முடிந்துவிட்டது. அதுமட்டுமல்ல, தனி அலுவலர் நியமனத்திற்குத்தான், இந்தச் சட்டமுன்வடிவு கொண்டுவரப்பட்டுள்ளது. இன்றைக்கு எந்தப் பணிகளும் நிலுவையில் இல்லை, அனைத்துப் பணிகளும் செய்யப்பட்டு வருகின்றன. இதையும் சுருக்கமாகச் சொல்கிறேன்; தனி அலுவலரை நியமித்த பின்னால், நகராட்சிகளில் மட்டும் 22,531 கோடி ரூபாயில் 28,147 பணிகள்; அதேபோல, பெருநகர மாநகராட்சியில் 6,728 பணிகள்; பேரூராட்சியில் கிட்டத்தட்ட 1,97,000 பணிகள் நடந்து கொண்டிருக்கின்றன. அதுமட்டுமல்ல, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள், அவரைப் பேசும்படி சொன்னீர்கள். அதற்குப் பிறகு இங்கிருப்பவர்களை சத்தம் போட வேண்டாம் என்று கண்டித்தீர்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேசும்பொழுது, மாண்புமிகு உறுப்பினர் பல்வேறு நேரங்களில் எழுந்து பேசியிருக்கிறார்; அப்போது எல்லோரும் பார்த்துக்கொண்டிருந்தோம். அதேபோல அங்கே ஓர் உறுப்பினர், யாரென்று தெரியவில்லை, அவரையும் கண்டித்தார். இது ஒரு தவறான வழிமுறை என்பதைத் தெரிவித்துக்கொண்டு, இந்த Bill-ஐ பொறுத்தளவுக்கு, இன்றைக்கு எந்த வேலையும் நிலுவையில் இல்லை. எல்லா வேலைகளும் நடந்து கொண்டிருக்கின்றன. இன்றைக்கு நீதிமன்றத்திற்கு schedule போட்டுக் கொடுத்துவிட்டார்கள். ஆகவே இந்த Bill-ஐ நிறைவேற்றித் தருமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 18 வரை, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 18 வரை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2019 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 29/2019) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

*ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)*

*மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)*

*ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.*

*ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.*

*சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.*

## (ஊ) தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (நான்காம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2019

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *2019 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (நான்காம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 30/2019), மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*"2019 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (நான்காம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 30/2019)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"*

*எனக் கோருகிறேன்.*

*பிற்பகல் 3–10*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. சேகர்பாபு, சொல்லுங்கள்.*

**திரு. பி.கே. சேகர்பாபு:** *மாண்புமிகு பேரவைத் தலைவர்*

---

*@ 19–7–2019 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.*